முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பதஞ்சலியார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

30.09.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **கருணா மூர்த்தியே அரங்கராசா**
**கண்ணியம்பட மக்களை தேற்ற**
**அரணாக அறம் வளர்த்து வரும்**
**அண்ணலே ஞான தேசிகனே**

2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
ஆசிபட **விளம்பி தரிவை திங்கள்**
**அறிவிக்க முன்னான்கீர் திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 14ம் நாள் 30.09.2018, ஞாயிற்றுக்கிழமை)**

3. வாரமதில் பதஞ்சலியார் யானும்
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
சோரம் போகா மக்களை மீட்க
சுப்பிரமணியர் சித்தியாகவே வந்தநல்

4. வந்தநல் அரங்கமகா ஞானியை
வணங்கி குருவாக ஏற்க
சிந்தைதனில் நித்ய பூசையாக
செபதபம் குருவின் பேரில் செய்து வருக

5. வருகவே குருவருள் மூலமாக
வடிவேலன் சக்திபலம் அடைந்து
முருகன் அருள் சீடர்களாகி உலகோர்
முழுமை ஞானம்தனை அடைவர்

6. அடைவர் மத இன பேத அல்லலை
அகற்றி சமத்துவம் காப்போராக
அடைவர் வஞ்சம் சூழ்ச்சி வென்று
ஆன்மபலத்துடன் சாத்வீகம்பட உலகில்

7. உலகில் உயர் சேவை ஆற்றவல்ல
உண்மை தொண்டர்களாகவும்
கலகமிலா சமாதானமிக்கவர்களாகவும்
கடமை கண்ணியமிக்க தருமவான்களாகவும்

8. ஆகியே அரங்கன் அவதரித்த
அழியாமை ஞான வாழ்வுக்கு
யுகமக்கள் அணுகுவார் தகுதி பெறுவர்
உயர்வான பதவி நிலை பெற

9. நிலையான வரவு சம்பாத்யம்
நிதி நிலை வளர உயர
சளைக்கா அரங்கன் காட்டும்
சன்மார்க்க நெறி ஏற்று நடக்க

10. நடக்கவே தடையற உயர்வும்
நல்வாழ்வும் வளமும் பெறுவர்
இடரை வென்று சிறக்க
எல்லா காலமும் திடம் பெற

11. திடம் பெற வீடுபேறு எனும்
தேற்றம் பெற கலி மக்களே
தடைபடா ஏழாம் படை வீடு வாரீர்
தாமுரைத்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் பதஞ்சலியார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கருணையே வடிவான கருணாமூர்த்தியே அரங்கமகா தேசிகனே கண்ணியத்துடன் மக்களைக் கடைத்தேற்றிடவே அரண் போல தருமமாகிய அறத்தினை வளர்த்து அறவேலியிட்டு காக்கின்ற அண்ணலே ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகாதேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறிய கூறியே **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 14ம் நாள் 30.09.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பதஞ்சலியார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பதஞ்சலியார்.

கலியுகத்தின் மாயையுள் உலக மக்களெல்லாம் சிக்கி வீண் போகாமல் அவர்களை நல்வழிப்படுத்தி மீட்டு காத்து ரட்சிக்கவே சுப்பிரமணியராம் முருகப்பெருமானின் சித்தியாக சக்தி வடிவமாக வந்துதித்த நல்ஞானி உலகப்பேராசான் ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியை உலக மக்களெல்லாம் மனமார முழுநம்பிக்கையோடு குலகுருவாக ஏற்று பயபக்தியுடன் வணங்கி வருதல் வேண்டும்.

அரங்கனை அவரவரும் குருவாக ஏற்று தினம்தினம் மறவாமல் ஜெபதபங்களை அரங்கன் பேரில் நாமஜெபமாக ஜெபித்து வணங்கி வருதல் வேண்டும். அவ்விதம் குருவினை தெய்வமாக எண்ணி வணங்கி வரவர, குருபக்தியின் காரணமாக அவர்களுக்கு குருவருள் கூடி அந்த குருவருளே திருவருளாக ஆகி ஆதிமூல தெய்வமாம் முருகப்பெருமானின் சக்தியாக மாறி முருகப்பெருமானின் சக்திபலம் அந்த அன்பருக்கு பெருகிடும்.

முருகப்பெருமானின் அருள்பலம் பெற்ற அந்த அன்பரெல்லாம் முருகப்பெருமானின் அருள் சீடர்களாக ஆகி முழுமையான உண்மை ஞானம்தனை அடைந்து சிறப்படைவார்கள்.

முழுமை ஞானம் அடையும் அன்பர்கள் பாகுபாடுகள் இல்லாதவர்களாக ஆகிடுவர். சாதி, மத, இன, மொழி, பேதா பேதங்கள் எல்லாம் விட்டு ஒழிந்து சமத்துவம், சகோதரத்துவத்தினை காப்பவர்களாக மாறிடுவர். வஞ்சம், சூழ்ச்சிகளை சிறப்பறிவால் வென்று ஆன்மபலம் பெருகி சாத்வீகமான சிந்தையுடன் அமைதியாக உலகினில் உயர்வான தொண்டுகளை, அறப்பணிகளை செய்கின்ற உண்மை தொண்டர்களாகவும் கலகங்கள் ஏதும் இல்லாத வகையில் நடந்து அமைதியும், சாந்தமும், சமாதானமும் மிக்கவர்களாகவும், கடமை, கண்ணியம் மிக்க தர்மவான்களாகவும் ஆகி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அவதார நோக்கத்தினை அறிந்து

உணர்ந்து அரங்கன் கூறும் அழியாமை வாழ்வாகிய மரணமிலாப் பெருவாழ்வு என்கிற ஞானவாழ்விற்கு தகுதியுடையவர்களாக தம்மை ஆக்கிக் கொள்வார்கள். அரங்கனின் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்று ஞானவாழ்விற்கு தகுதி பெறுவார்கள்.

உயர்வான பதவிகளில் நிலையான, நிலை வகிக்கவும், நிலையான வரவுகள், லாபம், சம்பாத்தியம் பெறவும், அவரவரின் நிதிநிலைகள் வளரவும் உயரவும் வேண்டுமாயின் அவரவரும் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டும் தூய சன்மார்க்க நெறியினை ஏற்று நடந்திட வேண்டும்.

ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானி காட்டும் தூய சன்மார்க்க நெறிப்படி நடந்திட அவர்களுக்கு தடையின்றி வாழ்வில் உயர்வும், நல்வாழ்வும், வளமும் பெற்று சிறப்படைவார்கள். அவர்களை அண்டும் இடர்களை வென்று சிறப்பான நிலையையும் பெறுவர்.

உலக மக்களே உங்களுக்கு வருகின்ற துன்பங்களை வென்று எல்லா நேரத்திலும் திடமான மனநிலையும் உடல் ஆரோக்கியமும் பெற்று நல்வாழ்வினை அமைதியுடன் வாழ்ந்து வீடுபேறு எனும் ஞானத்தில் தேர்ச்சி பெற்று ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள உடன் விரைந்து வாரீர், தடையின்றி அருள் செய்யும் ஞானவீடாம் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு. ஓங்காரக்குடிலிற்கு வருகை தந்து குடிலாசான் ஆறுமுக அரங்கன் திருவடி பணிந்து பெறுதற்கரிய பெறும் பேற்றினை பெற்று இன்புற்று வாழ வாரீர் வாரீர் என உலகோர்க்கு அழைப்பு விடுக்கின்றார் மகான் பதஞ்சலிமுனிவர்.

–சுபம்–